**அனுப்புநர்**

திருமதி க.சசிகலா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை - 600 006.

**பெறுநர்**

1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. முதன்மைக் கல்வி அலுவலர்கள், தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை.
3. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண்**:018677/எச்1/2025 **நாள்.** 04.06.2026

ஐயா/அம்மையீர்

**பொருள்** : சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச் 2026 - விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்- – விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வது மற்றும் விண்ணப்பத் தொகையினை ஆன்-லைன் மூலம் கருவூலத்தில் செலுத்துவது தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

**பார்வை:** அரசுத் தேர்வுகள் இயக்கக செய்திக் குறிப்பு, நாள்:04.06.2026

-----

மார்ச் 2026 மேல்நிலை பொதுத் தேர்வு தொடர்பாக விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் 0506.2026 முதல் தங்களது விடைத்தாள் நகல்களை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்ய பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்திக்குறிப்பில் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்யும் மாணவர்கள், மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து 05.06.2026 முதல் 16.06.2026 வரை சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் / முதன்மைக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணத் தொகையை விண்ணப்பத்தோடு சேர்த்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதற்கேற்ப அனைத்து உதவி இயக்குநர்களும் / தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் புதுச்சேரி இணை இயக்குநர் (கல்வி) ஆகியோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்தில் உள்ள **பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களிடமிருந்து** மறுமதிப்பீடு / மறுகூட்டல் விண்ணப்பங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மட்டுமே, மறுமதிப்பீடு (RV) / மறுகூட்டலுக்கு (RT) விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவார்கள்.

2. தேர்வர்கள் விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்தபின், அதே இணையதளத்தில் மறுமதிப்பீடு (RV) / மறுகூட்டலுக்கான (RT) விண்ணப்பத்தையும் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்திலுள்ள கலங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் கட்டணத் தொகையோடு சேர்த்து அவ்விண்ணப்பத்தை உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைப்பார்கள்.

**மறுமதிப்பீடு**

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.505/-

**மறுகூட்டல்**

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

3. உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் அலுவலகத்தில், தேர்வர்களிடமிருந்து மேற்கண்டவாறு விண்ணப்பங்களை பெற்றவுடன் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD-ஐ பயன்படுத்தி **05.06.2026 முதல் 16.06.2026 வரை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.** ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

4. 17.06.2026 அன்று மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விவரங்களை (Summary Report) பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பின்னர், விண்ணப்பத்திற்கென்று பெறப்பட்ட தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி ஆன்-லைன் மூலம் (e-challan Remittance) கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான கட்டணத்தினையும் செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | Chennai |
| Treasury | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 - Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 - Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01102 AA 22731 - Retotalling / Re-valuation |

5. மேற்கண்டவாறு தேர்வர்களின் விடைத்தாள் மறுமதிப்பீடு/ மறுகூட்டலுக்கான கட்டணத் தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும்

(1) செலுத்துச் சீட்டு (**Payment Receipt**)

(2) மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கு விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தேர்வர்களின் விவரங்கள் (**Summary Report**) மற்றும்

(3) முதன்மைக் கல்வி அலுவலரின் / உதவி இயக்குநரின் கையொப்பமிடப்பட்ட (with Sign) கீழ்க்காணும் சான்றிதழ் (**Certificate**)

ஆகியவற்றை அனைத்து உதவி இயக்குநர்களும் தங்களது அலுவலகங்களில் பத்திரமாக வைத்துக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. Payment Receipt மற்றும் Summary Report இரண்டினையும் ஒப்பிட்டு சரிபார்க்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் ( தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை) Payment Receipt மற்றும் Summary Report இரண்டிணையும் ஒப்பிட்டு சரிபார்த்தபின் மேற்குறிப்பிட்ட 3 ஆவணங்களையும் சார்ந்த உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சான்றிதழ்</u>

மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் ( ____ எண்ணிக்கை) அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

**முதன்மைக் கல்வி அலுவலர் / உதவி இயக்குநர்**

(அலுவலக முத்திரை)

**ஒம்/-**

**இயக்குநர்**

<u>**இணைப்பு**</u>: விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்

<u>**நகல்**</u>

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்), அனைத்து மாவட்டங்கள்

} -தகவலுக்காக

3. தொழில்நுட்பப் பிரிவு (அலுவலகம்)
4. கண்காணிப்பாளர், அ3, எச்3 பிரிவு (அலுவலகம்)